

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | மே 30, 2019 | புரட்சி 18 | முழக்கம் 20 | விலை: ரூ.3.00


# பார்ப்பன – மதவாத சக்திகளைப் புறக்கணித்தது பெரியார் மண்

தனிப் பெரும்பான்மையுடன் - மீண்டும் பிரதமராகவிருக்கும் மோடி - இந்தியா வெற்றி பெற்றிருக்கிறது என்று தனது வெற்றியைக் குறிப்பிட்டுள்ளார். 'மோடியே - இந்தியா' என்ற சர்வாதிகாரத்தின் வெளிப்பாடு இது. மோடியின் கூற்றுப்படி மோடியைப் புறக்கணித்த தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா போன்ற மாநிலங்கள் இந்தியாவில் இல்லை என்றே நாம் முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது.

வடநாட்டுக்கும் தென்னகத்துக்குமிடையே உள்ள முரண்பாடுகளை இந்தத் தேர்தல் முடிவுகள் கூர்மைப்படுத்தியிருக்கிறது என்றே கூறவேண்டும். பாரதிய ஜனதா கட்சியின் தேசிய ஜனநாயக முன்னனி இந்தியா முழுமைக்கும் 43.86 சதவீதமும், காங்கிரஸ் தலைமையிலான அய்க்கிய முற்போக்குக் கூட்டணி 25.81 சதவீத வாக்குகளையும் இரண்டு தேசிய கூட்டணிகளிலும் இடம் பெறாத மாநிலக் கட்சிகள் 30.33 சதவித வாக்குகளையும் பெற்றிருக்கின்றன. அதிகாரத்தைப் பிடித்துள்ள பாரதிய ஜனதா கட்சிக்கு எதிரான இரண்டு அணிகளும் 56.14 சதவீத வாக்குகளைப் பெற்றிருக்கின்றனர். இந்தியாவின் தேர்தல் அமைப்பு முறையில் வாக்குகளின் சதவீதங்களுக்கு ஏற்ப இடங்கள் கிடைப்பது இல்லை, இந்தியா வெற்றி பெற்றிருக்கிறது என்ற மோடியின் வாதப்படி பார்த்தால் அதே இந்தியாவில் மோடியின் இந்தியாவை மறுத்துள்ள வாக்குகள் 56.14 சதவீதமாகும் என்பதையும் அவர் ஒப்புக் கொள்ள வேண்டும்.

காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை பல முற்போக்குக் கருத்துக்களைக் கொண்டிருந்தது. கட்சியின் தலைவர் ராகுல் காந்தி 5 ஆண்டுகால மோடியின் ஆட்சியில் மக்கள் சந்தித்த நெருக்கடிகளை முன்வைத்து வாக்குகளைக் கேட்டார். குறிப்பாக தமிழ்நாட்டில் ராகுல்காந்தி முன்வைத்த கருத்துக்களை பாராட்டி வரவேற்க வேண்டும். பெரியாரின் நூல்களை மோடிக்கு அனுப்பி வைக்கத் தயார்; அதை அவர் படிக்க வேண்டும் என்று பேசியதோடு தென் மாநிலங்களை மோடி ஆட்சி புறக்கணிப்பதை சுட்டிக்காட்டியும் கல்வி உரிமையை மாநிலங்களுக்கு வழங்குவோம் என்றும் உறுதியளித்தார், கேரளாவில் வயநாடு தொகுதியிலும் அவர் போட்டியிட்டு மாபெரும் வெற்றியைப் பெற்றிருக்கிறார். ஆனால் உ.பி.யில் அமேதி தொகுதி அவரைக் கைவிட்டுவிட்டது. தென்னாடு அவரை அரவணைத்துக் கொண்டது. ஆனாலும் காங்கிரஸ் கட்சி, இத்தேர்தலில் பாஜகவின் எதிர்ப்பு அணியை நாடு முழுவதும் ஒன்று திரட்டும் முயற்சிகளில் முனைப்புக் காட்டவில்லை. குறிப்பாக உ.பி., பீகார் மாநிலங்களில் எதிர்ப்பு அணிகளின் பிளவை பாஜக தனக்கு சாதகமாக்கிக் கொண்டிருப்பதை தேர்தல் முடிவுகள் உணர்த்துகின்றன. மக்கள் பிரச்சினைகளை பேசாமல் தவிர்த்து தேசம் - தேசப்பாதுகாப்பு என்ற தேசிய வாதத்தை முன்வைத்து மோடி பரப்புரை செய்தார். மதச்சார்பின்மை பேசுகிறவர்கள் எங்கே போனார்கள் என்று தேர்தல் வெற்றிக்குப் பிறகு மோடி எழுப்பியுள்ள கேள்வி மிக மிக ஆபத்தானது. இந்தியாவில் மதச் சார்பின்மையைப் பேசுவதே தேசியத்துக்கு எதிரானது என்ற மோடியின் முழக்கம் இந்துப் பார்ப்பனியமே இந்தியாவின் அடையாளம் என்ற அபாய அறிவிப்பதாகும். அடுத்தடுத்து நிகழப்போகும் இந்த பார்ப்பனிய ஒடுக்கு முறைகளை சந்திப்பதற்கு தமிழர்கள் தயாராக வேண்டும்.

தமிழ்நாடு இந்துப்பார்ப்பனிய சிந்தனை யோட்டத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டு பெரியார் ஆழ உழுது விதைத்து விட்டுப் போன சமூகநீதி மண் என்பதை தேர்தல் முடிவுகள் இந்தியா முழுமைக்கும் கம்பீரமாக பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. திமுக தலைமையிலான கூட்டணி மதவாதக் கூட்டணியை முறியடித்து மகத்தான சாதனையை நிகழ்த்தி முடித்திருக்கிறது என்றாலும் மோடி எதிர்ப்பு உணர்வை தமிழகத்தில் ஆழமாக விதைத்ததில் பெரும் பங்காற்றியது தேர்தல் அரசியலில் ஈடுபடாத இயக்கங்கள்தான் என்ற உண்மையை மறுத்துவிடமுடியாது.

மதவாதத் திணிப்பு, இந்தி, சமஸ்கிருதத் திணிப்பு, தமிழ்நாட்டு அரசுப் பணிகளில் வடநாட்டார் திணிப்பு, கல்வி உரிமைப் பறிப்பு, நீட் திணிப்பு களுக்கு எதிராக தமிழகத்தில் இயக்கங்கள் களத்தில் மக்களைத் திரட்டிப் போராடின, அரசின் கடும் ஒடுக்குமுறைகளை எதிர்கொண்டன. தமிழ்நாட்டு வளங்கள் சுரண்டப்படுவதை எதிர்த்தும்- மீத்தேன், ஹைட்ரோ கார்பன் திட்டங்களை எதிர்த்தும் இயக்கங்களோடு இணைந்து மக்களும் வீதிக்கு வந்து போராடினார்கள். தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக நடந்த மக்கள் போராட்டத்தினால் 13 உயிர்கள் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்கள்.

மாநில உரிமை, இந்துத்துவ எதிர்ப்பை முன்வைத்து இயக்கங்கள் நடத்திய போராட்டங்களே தமிழகத்தில் மோடி அலை நுழையவிடாமல் தடுத்து நிறுத்தியிருக்கிறது.

கலைஞர் மறைவுக்குப் பிறகு திமுக தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட மு.க. ஸ்டாலின் மேற்கொண்ட உறுதியான பாஜக எதிர்ப்பு, கூட்டணிக் கட்சிகளிடம் காட்டிய அரவணைப்பு, தீவிரமான பரப்புரை, மக்களை நேரடியாக சந்தித்து உரையாடி வாக்கு சேகரித்த அணுகுமுறை மக்களை மிகவும் கவர்ந்துவிட்டது.

ஆனாலும் திமுகவை வலிமையான கட்சியாக மாற்றி அமைக்க வேண்டியிருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். கிராமம், ஒன்றியம், நகரம் என்ற கீழ் மட்ட அளவில் கட்சி உணர்வோடு பணியாற்றக் கூடிய தோழர்கள் மிகவும் குறைந்துவிட்டார்கள் என்பதையும், மாவட்ட நிர்வாகிகளுக்கும், கீழ்மட்டத்தில் பணியாற்றும் தோழர்களுக்கும் பெரும் இடைவெளி இருப்பதையும் பலரும் சுட்டிக் காட்டுகிறார்கள். திமுக தலைவர் இது குறித்த கவலையுடன் சிந்திப்பார் என்று நாம் நம்புகிறோம். திராவிட இயக்கக் கொள்கை அடையாளத்தோடு தமிழ்நாட்டில் இயங்கும் ஒரே அரசியல் கட்சியாக திமுக மட்டுமே இருக்கிறது. திமுக மீது நமக்கு விமர்சனங்கள் உண்டு. ஆனாலும் திமுகவை வீழ்த்தி விட்டால், தமிழ்நாட்டில் திராவிட இயக்க உணர்வையே முற்றிலும் அழித்துவிடலாம் என்ற ஒற்றை இலக்கோடு திராவிட இயக்க எதிர்ப்பாளர்கள் பல்வேறு அடையாளங் களில் வரிந்து கட்டி நிற்கிறார்கள் என்பதையும் நாம் உணர்ந்திட வேண்டும்.

இந்தத் தேர்தலில் பாட்டாளி மக்கள் கட்சி வேட்பாளர்கள் படுதோல்வியை சந்தித்திருக்கிறார்கள். குறிப்பாக மருத்துவர் அன்புமணி தர்மபுரி தொகுதியில் தோல்வியைத் தழுவியிருக்கிறார். வாக்கு வங்கி அரசியலுக்கு ஜாதியை மூலதனமாக்கி அதை முன் வைத்து கூட்டணிக்குப் பேரம் பேசும் பா.ம.க.வின் சந்தர்ப்பவாத அரசியல், கடும் பின்னடைவைச் சந்தித்திருக்கிறது. ஜாதி எதிர்ப்புக்காக தொடர்ந்து போராடிவரும் இயக்கங்களின் நோக்கத்தை முறியடித்து ஜாதி வெறிநோக்கி சமூகத்தைப் பின்னோக்கி இழுத்துச் செல்லும் பா.ம.க.வின் தோல்வி ஜாதி எதிர்ப்பு இயக்கங்களுக்கு கிடைத்த வெற்றியே ஆகும்.

அதேநேரத்தில் வரலாற்று ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களான தலித் மக்களின் தலைவராக இந்துத்துவ சனாதன எதிர்ப்பு லட்சியங்களில் சமரசம்செய்து கொள்ளாமல் தேர்தல் களத்தை சந்தித்த விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் பெற்றுள்ள வெற்றி மிகவும் மகத்தானதாகும்., ரிசர்வ் தொகுதியில் போட்டியிடும் பட்டியல் பிரிவு வேட்பாளர்களில் மேல்ஜாதி அதிகாரத்துக்குப் பணிந்து போகக் கூடியவர்களாக இருப்பவர்களே வெற்றி பெறமுடியும் என்பதே ஜாதிய சமூகத்தின் உளவியல். உரிமைப் போராட்டத்தை வீரியமாக முன்னெடுக்கும் தொல் திருமாவளவன் போன்றவர்கள் வெற்றி பெறவே கூடாது என்றுதான் கருதுவார்கள். இந்தப் பின்னணியில் தான் திருமாவளவன் பெற்றுள்ள வெற்றியை - வாக்கு வித்தியாசம் குறைவாக இருந்தாலும் மகத்தான வெற்றி என்று குறிப்பிடுகிறோம். இலண்டன் வட்டமேசை மாநாட்டில் அம்பேத்கர் வலியுறுத்திய இரட்டை வாக்குரிமையின் தேவையையும் அவசியத்தையும் காலம் உணர்த்தி நிற்கிறது.

தமிழ்நாட்டில் காமராசர் வளர்த்த காங்கிரஸ் கட்சி காமராசர் பாதையிலிருந்து திசை திரும்பி தேர்தல் வெற்றிக்கு கட்சியே பார்ப்பனர்களை வைத்து யாகம் நடத்திய கூத்தும் அரங்கேறியது. இது தான் காமராசர் காட்டிய பாதையா என்று கேட்க

4ஆம் பக்கம்

## விஜயேந்திரன்–குருமூர்த்தி மோதல் வலுக்கிறது

# காஞ்சி சங்கர மடத்தில் கலகம்

## ஜூனியர் விகடன் தரும் தகவல்கள்

*பார்ப்பன அதிகார மய்யமான காஞ்சி சங்கர மடத்தின் சொத்துக்களை சுருட்டுவதில் ‘அவாள்’களுக்குள் கடும் போர் நடக்கும் செய்திகள் அம்பலமாகியுள்ளன. இது குறித்து ‘ஜூனியர் விகடன் (22.5.2019) வெளியிட்டுள்ள விரிவான கட்டுரை*

ஆன்மிகம்... அரசியல்... அதிகாரம் என்று இந்திய அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் அளவுக்கு வல்லமை படைத்தது காஞ்சி காமகோடி பீடம். குறிப்பாக மடத்தின் பீடாதிபதி, பிரதம மந்திரிக்கே ஆலோசனை சொல்லும் அதிகாரத்தைப் பெற்றிருந்தார். இன்றைக்கு அந்த ‘பவர் சென்டர்’, பிரச்னைகளின் சென்டராக மாறியிருக்கிறது. “மத்தியிலும் மாநிலத்திலும் அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் சிலர், மடத்தைத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவரும் வேலையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்கள். மடத்தின் பீடாதிபதிக்குப் பல்வேறு வழிகளில் இவர்கள் நெருக்கடி கொடுத்து, ஏகப்பட்ட காரியங்களைச் சாதித்துக்கொள்ளத் திட்டமிடுகிறார்கள். இதை எல்லாம் பார்த்துக்கொண்டும் எங்களால் ஒன்றும் செய்யமுடிவில்லை’’ - ஜூனியர் விகடனில் கடந்த இரு இதழ்களில் மிஸ்டர் கழுகு பகுதியில் வெளியான சங்கர மடத்தின் விவகாரம் பற்றிய செய்திகளைப் படித்துவிட்டு, நம்மைத் தொடர்பு கொண்ட மடத்தின் பாரம்பர்ய பக்தர்கள் சிலர், புலம்பியதுதான் மேற்கண்ட வரிகள். என்ன தான் நடக்கிறது காஞ்சி மடத்தில்? தீவிர விசாரணையில் இறங்கினோம்.

‘இந்து மத தர்மங்களைக் கட்டிக்காப்பதற்காக இந்தியாவின் நான்கு திசைகளிலும் ஆதிசங்கரர் மடங்களை நிறுவினார். கிழக்கே பூரியில் கோவர்தன மடம், மேற்கே துவாரகையில் காளிகா மடம், வடக்கில் பத்ரிகாஷ்ரமத்தில் ஜோதிர் மடம், தெற்கில் சிருங்கேரியில் சிருங்கேரி மடம் என நிறுவினார் ஆதிசங்கரர். தன் இறுதிக் காலத்தைத் தமிழகத்தின் காஞ்சிபுரத்தில் கழித்தபோது காஞ்சி சங்கர மடத்தையும் நிறுவினார்; அங்கேயே முக்தி அடைந்தார் என்பது காஞ்சி மடம் குறிப்பிடும் வரலாறு. இது போன்ற காரணங்களால், சங்கர மடங்கள் வகுப்பது தான் இந்து தர்மம்; பீடாதிபதி சொல்வது தான் இந்து தர்ம கட்டளை; அதைப் பின்பற்றுவதுதான் எங்களைப் போன்ற உண்மையான இந்துக்களின் கடமை. இதை நாங்கள் ஆணித்தரமாக நம்புகிறோம். ஆனால், அந்த நம்பிக்கையை வைத்தே இப்போது பலரும் கோடிகளைக் குவித்துவருகிறார்கள்’’ என்று முன்னுரை கொடுக்கிறார்கள் சங்கர மடத்தின் பாரம்பர்ய பக்தர்கள்.

மேற்கொண்டு பேசியவர்கள், “ஜெயேந்திரர் மறைவுக்கு முன்பே, மடத்தில் விரும்பத்தகாத சில நிகழ்வுகள் நடந்தன. குறிப்பாக, ஜெயேந்திரரின் இறுதிக் காலகட்டங்களில் அவரை முற்றிலும் ஓரம் கட்டும் வேலைகளை மடத்தில் இருந்த சிலரே தந்திரமாகச் செய்தனர். ஜெயேந்திரர் யாரையும் சந்தித்து விடக்கூடாது என்பதில் அவர்கள் உறுதியாக இருந்தார்கள். அதனால், வி.ஐ.பி-க்கள் பலரும் மடத்துக்கு வந்தபோதுகூட பால பெரியவரான விஜயேந்திரரை மட்டுமே சந்திக்க வைத்தனர். அந்த மன உளைச்சலே ஜெயேந்திரரின் உடல்நிலையை மேலும் மோசமாக்கியது. 2018ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஜெயேந்திரர் மறைவுக்குப் பிறகு, அடுத்த பீடாதிபதியாகப் பொறுப்பேற்றார் விஜயேந்திரர். அதற்குப் பிறகு பல மாற்றங்கள் மடத்துக்குள் அரங்கேறத் தொடங்கின.

**கட்டளையிடும் அரசியல் சக்திகள்**

வெளியிலிருக்கும் சில அரசியல் சக்திகளிடமிருந்து பீடாதிபதிக்குக் கட்டளைகள் வருகின்றன. அதைப் பின்பற்றித்தான் அவரும் நடக்கிறார். மடத்தின் ஒட்டு மொத்த நிர்வாகமும் அந்த அரசியல் சக்திகளின் கைகளில்தான் இருக்கிறது. அவர்கள் மடத்தின் சொத்துகளை கபளீகரம் செய்து கொண்டிருக்கின்றனர். மடத்துக்கு ஒரு இலட்சம் கோடி ரூபாய் அளவுக்கான அசையும் மற்றும் அசையா சொத்துகளும் நான்காயிரம் கோடி ரூபாய் பணமும் உள்ளது. இந்த ஆஸ்தியை குறிவைத்துதான் இவ்வளவு அரசியலும் நடக்கின்றன. மடத்துக்கு வெளியே ஒரு டீம், மடத்துக்குள்ளே ஒரு டீம் என்று இரண்டு குழுக்கள் கைகோத்து சில காரியங்களை கச்சிதமாக அரங்கேற்றி வருகிறது’’ என்றவர்கள், அது பற்றியும் பகிர்ந்து கொண்டார்கள்.

> **தான் உயிருடன் இருந்தபோது, தன்னுடைய சொந்த தம்பி இராமகிருஷ்ணனையும் மடத்தின் காரியதரிசியாக இருந்த காலடி விஸ்வநாதனையும் பல்வேறு காரணங்களால் ஜெயேந்திரர் வெளியேற்றினார். இந்த இருவரும் தற்போது மீண்டும் மடத்துக்குள் கொண்டு வரப்பட்டு விட்டனர்.**

“ஜெயேந்திரர் உயிருடன் இருந்தபோது, பத்மாவதி மருத்துவக் கல்லூரி, கிரேட் ஈஸ்டர்ன் மருத்துவக் கல்லூரி, குண்டூர் மருத்துவக் கல்லூரி, உத்திராடம் திருநாள் (எஸ்.யூ.டி) மருத்துவக் கல்லூரி ஆகிய நான்கு கல்லூரிகள் வாங்கப்பட்டன. இது போன்று பல வகைகளில், ஜெயேந்திரர் காலத்தில் மடத்தின் சொத்துகள் பல மடங்காக உயர்ந்தன. தற்போது, அதில் மூன்று மருத்துவக் கல்லூரிகள் முக்கியப் புள்ளிகளுக்கு விற்கப்பட்டு விட்டன. திருவனந்தபுரத்தில் உள்ள எஸ்.யூ.டி. மருத்துவக் கல்லூரி மட்டும்தான், தற்போது மடத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதை, ஜெயேந்திரரால் நியமிக்கப்பட்ட கௌரி காமாட்சி என்ற பெண் இப்போதும் நிர்வகித்து வருகிறார். மற்ற கல்லூரிகளை விற்றது போலவே, இந்த மருத்துவக் கல்லூரியை விற்பனை செய்யும் வேலையில் வெளியிலிருக்கும் அரசியல் சக்திகள் இறங்கியுள்ளன. முதல்படியாக, அந்தப் பெண்ணை, காஞ்சி காமகோடி அறக்கட்டளையிலிருந்து நீக்கும் முயற்சிகளும் நடக்கின்றன. ‘ஜெயேந்திரர் உயிருடன் இருந்தபோது செய்யப்பட்ட பலவிதமான பணிகளுக்குப் பணம் கொடுக்கவில்லை’ என்று சொல்லி, எந்த ஆதாரமும் இல்லாமல் மடத்திடம் பணத்தைக் கறக்கும் வேலையிலும் பலர் இறங்கியுள்ளனர். கோடிக்கணக்கில் பணம் செட்டில் செய்யப்படுகிறது. வெளியிலிருந்து மடத்தை ஆதிக்கம் செய்யும் சக்திகளே, இப்படி போலியான நபர்களை செட்டப் செய்து அனுப்பி, கொள்ளையடிக்கிறார்கள்.

தான் உயிருடன் இருந்தபோது, தன்னுடைய சொந்த தம்பி இராமகிருஷ்ணனையும் மடத்தின் காரியதரிசியாக இருந்த காலடி விஸ்வநாதனையும் பல்வேறு காரணங்களால் ஜெயேந்திரர் வெளியேற்றினார். இந்த இருவரும் தற்போது மீண்டும் மடத்துக்குள் கொண்டு வரப்பட்டு விட்டனர். அதேசமயம், ஜெயேந்திரரால் விரும்பி மடத்துக்குள் கொண்டுவரப்பட்ட ஸ்ரீராம், தாடி முத்துராமன் ஆகிய நிர்வாகிகள் கட்டாயமாக வெளியேற்றப்பட்டுள்ளனர். தற்போதைக்கு ராமகிருஷ்ணன், மேனேஜர் சுந்தரேசன், காலடி விஸ்வநாதன், விஜயேந்திரர் தம்பி ரகு, பம்மல் விஸ்வநாதன் உள்ளிட்டவர்கள்தான் சர்வ வல்லமையுடன் காஞ்சி மடத்துக்குள் அதிகாரமிக்க சக்தியாக இருக்கிறார்கள்’’ என்று சொன்ன வர்கள், வெளியிலிருந்து மடத்தை இயக்குபவர்கள் பற்றியும் தகவல்களைச் சொன்னார்கள்.

“தற்போது மடத்தில் நடக்கும் பல விஷயங்களில் பி.ஜே.பி கட்சியில் செல்வாக்கு பெற்ற ஆடிட்டர் குருமூர்த்திக்கும் முக்கியப் பங்கு உண்டு. சமீபத்தில் அந்த ஆடிட்டர் தலைமையில் ஒரு கூட்டம் நடந்தது. ‘மடத்தின் சொத்துகளை எப்படி நிர்வகிப்பது?’ என்று அந்தக் கூட்டத்தில் ஆலோசனை நடந்துள்ளது. இப்படி ஒரு கூட்டம் நடைபெற்றது, மடத் தின் பீடாதிபதிக்கே பல நாள்கள் கழித்துதான் தெரிய வந்துள்ளது. மடத்தின் சொத்து விவகாரம் குறித்து முடிவு எடுக்க வேண்டியவர் பீடாதிபதி தானே தவிர, ஆடிட்டர் அல்ல’’ என்று கோபத் துடன் சொன்னார்கள்.

இதுதொடர்பாக மடத்தின் பணியாளர்கள் தரப்பிலிருந்து நம்மிடம் பேசிய சிலர், “காஞ்சி மடத்துக்குச் சொந்தமாக பல நூறு கிலோ கணக் கில் தங்கம், வெள்ளி உள்ளிட்ட விலை உயர்ந்த பொருட்கள் இருக்கின்றன. குறிப்பாக, பீடாதிபதிகளுக்குப் பாதபூஜை நடைபெறும்போது தங்கக் காசுகளைப் பக்தர்கள் செலுத்துவார்கள். **அந்தத் தங்கக் காசுகளைப் பாதபூஜை முடிந்தவுடனே, மடத்தில் அதிகாரம் செலுத்தும் சிலர் எடுத்துச் சென்றுவிடுவது வாடிக்கையாக இருக்கிறது.**

தற்போதைய பீடாதிபதியான விஜயேந்திரரின் தம்பி ரகுமீது சில வில்லங்கப் புகார்கள் எழுந்துள்ளன. ரகு குறித்த ஒரு வில்லங்க வீடியோவை ஒரு டீம் இப்போது கையில் வைத்துக்கொண்டு ரகுவுக்கு செக் வைக்கத் திட்டமிடுகிறது. இந்த வில்லங்க விவரங்கள் எல்லாம் வெளியே இருக்கும் அதிகார மையங்களுக்குத் தெரிந்ததாலேயே, அவர்களுக்கு மடத்தில் இருப்பவர்கள் பணிந்துபோகும் நிலை ஏற்பட்டிருப் பதாகச் சொல்கிறார்கள். காஞ்சி மடத்தின் அடுத்த இளைய மடாதிபதியை விஜயேந்திரர் விரைவில் அறிவிக்க வேண்டும். அப்படி நியமிக்கப்படும் இளைய மடாதிபதி தாங்கள் கைகாட்டும் நபராக இருக்க வேண்டும் என்றும் விஜயேந்திரருக்கு நெருக்கடி கொடுக்கப்படுகிறது.

ஜெயேந்திரரின் நம்பிக்கைக்குரிய நபர்களை ஓரம் கட்டுவது போலவே, மடத்திலிருந்து ஜெயேந்திரரின் அடையாளங்களும் கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கப்பட்டு வருகின்றன. மடத்தி லிருக்கும் பல்வேறு கல்வெட்டுகளில் ஜெயேந்திரரின் பெயர் நீக்கப்படுகின்றன. ஜெயேந்திரர் பயன்படுத்திய வாசல் அறை அடைக்கப்பட்டு, அதை மறைக்கும் படியாக பெரிய சிம்மாசனம் அமைக்கப்பட்டுள்ளது. அதில்தான் விஜயேந்திரர் அமர வைக்கப்படுகிறார். இதுவும் மடத்தின் தர்மத்துக்கு எதிரானது. ஒரு பீடாதிபதி, சிம்மாசனத்தில் அமரக் கூடாது என்ற விதியும் இப்போது மீறப்பட்டுள்ளது. ஜெயேந்திரரின் கடைசிக் காலத்தில் அவரை மடத்துக்கு உள்ளேயே சிறை வைத்ததுபோல் வைத்திருந்தனர். ஜெயேந்திரருக்குக் கடைசிகாலத்தில் நிகழ்ந்தது, விஜயேந்திரருக்கு இப்போதே நிகழத் தொடங்கிவிட்டது’’ என்று கவலை பொங்கச் சொல்கிறார்கள் அவர்கள்.

“இப்போது தொடங்கியிருக்கும் விவகாரம் கிட்டத்தட்ட பழிதீர்ப்பதற்கான போர்’’ என்றே மடத்தின் வட்டாரங்களில் பேசப்படு கிறது. இது பற்றியும் பேசியவர்கள், “மடத்தின் சொத்துகளைக் குறிவைத்து நடக்கும் இன்றைய காய் நகர்த்தல்களின் பின்னணியில், பல ஆண்டுகளுக்கு முந்தைய சம்பவம் ஒன்று இருக்கிறது. அப்போது மடத்தில் ஒரு விழா நடந்தது. அப்போது **விஜயேந்திரருக்கும் ஆடிட்டர் குருமூர்த்திக்கும் ஏதோ வாக்குவாதம் ஏற்பட் டுள்ளது. அதையொட்டி ஜெயேந்திரர் குருமூர்த்தியிடம் கடினமான வார்த்தைகளைப் பிரயோகித்திருக்கிறார்.** இதில் கோபம் அடைந்த குருமூர்த்தி, ‘இனி மடத்துக்கு வரமாட்டேன்’ எனத் திரும்பி விட்டாராம். அன்று கோபத்துடன் வெளியேறியவர் 15 ஆண்டுகளுக்கும் மேலாக மடத்தின் பக்கமே வரவில்லை. ஜெயேந்திரர் இறந்த அன்று மாலைதான் உள்ளே வந்தார்’’ என்றனர் மடத்துக்கு நெருக்கமானவர்கள்.

இந்த விவகாரங்கள் குறித்து காஞ்சி மடத்தின் கருத்தை அறிவதற்காக, அதன் மேலாளர் சுந்தரேசனிடம் பேசினோம். அவர் நம்மிடம், “மடத்தின் செயல்பாடுகள் சிறப்பாக இருக்கின்றன. மடத்தின் முடிவுகளில் வெளியாட்கள் யாரும் தலையிட முடியாது. மடத்தின் சொத்துகள் தொடர்பான விவகாரங்களிலும் வெளி ஆட்கள் தலையிட முடியாது. எந்தச் சொத்தையும் நாங்கள் விற்க வில்லை. குத்தகை மட்டுமே விட்டுள்ளோம். அதையும் சரியாக வசூல் செய்துவருகிறோம். ஆடிட்டர் குருமூர்த்தியைப் பற்றி குற்றம்சுமத்தி செய்தி பரப்பி வருகிறார்கள். குருமூர்த்தி மடத்தின் விவகாரங்களில் தலையிடுவது இல்லை. அவர் மடத்தின் பக்தர். அவ்வளவுதான். அதேபோல மடம் தொடர்பாக உங்களிடம் கூறப்பட்டிருக்கும் பல விஷயங்களும் உண்மை இல்லாதவையே. மடத்தின் சொத்துக் கணக்குகள், வரவு-செலவுகள் அனைத்தும் சரியாகவே பராமரிக்கப்படுகின்றன. கடந்த ஆண்டைவிட, இந்த ஆண்டு 30 சதவிகிதம் மடத்துக்குக் கூடுதல் வருமானம் கிடைத்துள்ளது’’ என்று முடித்துக் கொண்டார்.

இந்த விவகாரங்கள் குறித்து ஆடிட்டர் குருமூர்த்தியிடம் பேசினோம். “காஞ்சி மடத்திலிருந்து யாராவது என்னைப் பற்றிப் புகார் சொல்லி

(4ஆம் பக்கம்)

## குற்றவாளிகளைக் காப்பாற்ற ஆர்.எஸ்.எஸ். பல்வேறு முயற்சிகளை எடுத்தது (2)

# கோட்சே ஒரு ‘இந்து’ தீவிரவாதியே!

***கோட்சே என்ற தனிமனிதனின் வெறிச் செயல் தான் காந்தி கொலை என்றும், அதை பா.ஜ.க.வோ சங்பரிவாரங்களோ ஏற்கவில்லை என்றும் பா.ஜ.க.வினர் வாதாடுகிறார்கள். கோட்சே பயங்கரவாதிதான்; ஆனால் இந்து பயங்கரவாதி என்று கூறுவது இந்து மதத்துக்கு விரோதம் என்றும் கூறுகிறார்கள். மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்காசன் வெளியிட்ட கருத்துக்கு எதிராக எழுந்த எதிர்வினைகள் இவை. கோட்சே தனி மனிதரா? ஆர்.எஸ்.எஸ். ‘இந்து’ தர்மம் – இந்துத்துவம் என்ற வலைப் பின்னலி லிருந்து கோட்சேயை தனித்துப் பிரித்தெடுக்க முடியுமா?***

***காந்தி கொலையில் பல வரலாறுகள் திரிக்கப் பட்டு உண்மைகளை மறைத்து, சங்பரிவாரங் களும் இந்துத்துவா சக்திகளும் திட்டமிட்டு பரப்புரை செய்து வருகின்றன. அது குறித்த வரலாற்று உண்மைகளை ஓரளவு இந்தக் கட்டுரையில் விளக்குகிறது.*** *(சென்ற இதழ்த் தொடர்ச்சி)*

இந்து-முஸ்லிம் ஒற்றுமையின் மூலம் சுதந்திரத் திற்கான போராட்டத்தை நடத்த வேண்டும் என்ற காந்தியாரின் கொள்கையை இந்தக் கூட்டம் - ஆரம்ப காலத்தில் இருந்தே கடுமையாக எதிர்த்து வந்தது!

காந்தியார் இந்துக்களை கோழையாக்கிவிட்டார் என்று அவர்கள் தொடர்ந்து குற்றம்சாட்டி வந்தனர். காங்கிரசுக்குள்ளே காந்தியார் எதிர்ப்பு உணர்வை ஏற்படுத்தும் முயற்சிகளில் இடைவிடாது ஈடுபட்டு வந்திருக்கின்றனர்.

ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனக் கூடாரம் காந்தியார் மீது எப்படிப் பகைமை கொண்டிருந்தது என்பதை காந்தியார் உதவியாளர் பியாரிலால் தனது நூலில் கீழ்க்கண்டவாறு விவரிக்கிறார்:

“இந்து இராஷ்டிரம் அமைய வேண்டும் என்று சொன்ன முரட்டுத்தனமான கூட்டம், மராட்டிய மாநிலத்தில் இருந்தது. அவர்கள் பார்ப்பன பிற்போக்காளர்கள். அவர்களின் அரசியல் கருத்து காந்தியாருக்கு நேர் எதிரானதாகும். காந்தியாரின் அரசியல் கொள்கை, மராட்டியத் தலைவர் லோகமான்ய திலகருக்கு எதிரானதாகும் என்று அவர்கள் கருதினர். திலகரின் கொள்கை மறைந்து போய்விடுமோ என்று அஞ்சினர். அதன் காரணமாக காந்தியாருக்கு எதிராக 25 ஆண்டு காலம் இடை விடாது பிரச்சாரத்தை - அவர்கள் செய்து வந்தனர். காந்திஜியின் செல்வாக்கு வளருவது - அவர்களுக்கு விரக்தியை உண்டாக்கியது. இந்தக் கூட்டம் தான் 1934இல் புனேயில் காந்திஜி மீது வெடிகுண்டு வீச முயற்சி செய்தது. அப்போது காந்திஜி தீண்டாமை எதிர்ப்புப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தார்.

இப்போது அவர்கள் காந்திஜியை கொலை செய்திருக்கிற திட்டம் அவர்களால் மிகவும் திட்டமிடப்பட்ட ஒன்றாகும்.

அதற்கு சரியான இளைஞரைத் தேடிப் பிடித்து அதற்கான பயிற்சிகளை கொடுத்து திட்டமிட்டு இதைச் செய்திருக்கிறார்கள். அவர்கள் காலில் போட்டிருக்கும் ஷூக்களுக்குள் காந்தி, நேரு உள்பட பல காங்கிரஸ் தலைவர்களின் படம் இருக்கும். அந்தப் படத்தை வைத்து, துப்பாக்கியால் சுட்டு, பயிற்சி பெறுவது அவர்கள் வழக்கம்” என்று பியாரிலால் தனது நூலில் எழுதியிருக்கிறார். (பக்கம் 751)

**கபூர் ஆணையம் ஆர்.எஸ்.எஸ்.சுக்கு நற்சான்றிதழ் வழங்கியதா?**

காந்தி கொலை பற்றி ஆராய 20 ஆண்டுகளுக்குப் பிறகு ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி ஜே.எல். கபூர் தலைமையில் அரசு ஒரு விசாரணை ஆணையத்தை நியமித்தது. அதே ஆணையம் 1969இல் அரசிடம் சமர்ப்பித்த அறிக்கையில் காந்தி கொலைக்கும் ஆர்.எஸ்.எஸ்.சுக்கும் தொடர்பு இல்லை என்று கூறி விட்டதாக ஆர்.எஸ்.எஸ். பிரச்சாரம் செய்கிறது!

உண்மை என்ன? இந்த ஆணையத்தின் விசாரணை வரம்புகளை நிர்ணயித்த உள்துறை அமைச்சகம், காந்தியார் கொலையில் ஆர்.எஸ்.எஸ். நேரடி பங்கு குறித்து குறிப்பிடவே இல்லை. ஆர்.எஸ்.எஸ். தொடர்பு விசாரணை வரம்புக்கு உட்படாத பிரச்சினையாகவே உள்துறை அமைச்சகத்தால் மாற்றப்பட்டுவிட்டது. அது

**1949 நவம்பர் 15ஆம் தேதி தூக்கிலிட நாள் குறிக்கப்பட்டது. அம்பாலா பொதுச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த இருவரையும் தூக்கிலிடப்படும் நாளன்று அதிகாலையில் இதே வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கோபால் கோட்சே, மதன்லால், கார்கரே மூவரும் நேரில் சந்திக்க வந்தனர். அனைவரும் ஒன்றாக சேர்ந்து ‘பகவத் கீதை’யைப் படித்தார்கள்.**

மட்டுமல்ல, உள்துறை செயலாளராக இருந்த அய்.சி.எஸ். பார்ப்பன அதிகாரி, ஆணையம் முன் அளித்த சாட்சியத்தில் கொலைக்கு ஆர்.எஸ்.எஸ். தொடர்பில்லை என்று கூறினார். இதை ஆர்.எஸ்.எஸ். தனக்கு சாதகமாகக் கூறுகிறது. ஆனால், பி.பி.எஸ். ஜெட்லே என்ற மூத்த புலனாய்வுத் துறை அதிகாரி (55ஆவது சாட்சி), காந்தி கொலைக்கு ஆர்.எஸ்.எஸ். இரகசிய திட்டமிட்டது தனக்கு தெரிய வந்தபோது, அந்த அமைப்பை தடைசெய்ய வேண்டும் என்று, உ.பி. முதல்வர் ஜி.பி. பந்த், உள்துறை அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரியிடம் தாம் பரிந்துரைத்ததாகக் குறிப்பிட்டுள்ளார். ஜே.என்.சகானி, ஹீஜா உள்ளிட்ட பல சாட்சியங்கள் காந்தி கொலையில் ஆர்.எஸ்.எஸ். தொடர்பை உறுதி செய்ததை கபூர் ஆணையத்தின் அறிக்கை பதிவு செய்துள்ளது.

வழக்கு விசாரணை : நடந்தது என்ன?

- காந்தியார் கொலை வழக்கு 1948 மே மாதம் இறுதி யில் டெல்லி செங்கோட்டையில் தொடங்கி 7 மாதங்கள் நடந்தன. டிசம்பர் 30ஆம் தேதி நிறை வடைந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி ஹெச் ஆத்ம சரண்.
- வழக்கு விசாரணை வெளிப்படையாக நடந்தது. உரிய அனுமதி பெற்று வழக்கு விசாரணையை நேரில் பார்வையிட பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட்டார்கள்.
- வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர்களில் ஒருவரான சித்பவன் பார்ப்பனர் சாவர்க்கருக்கு 8 வழக்கறிஞர்கள் வாதிட்டனர். கோட்சே உட்பட ஏனையோருக்கு தலா ஒரு வழக்கறிஞர் மட்டுமே வாதிட்டார்.
- வழக்கின் முதன்மைக் குற்றவாளியான கோட்சே, நாராயண் ஆப்தே இருவரும் சாவர்க்காரின் சீடர்கள். இவர்களின் செயல்பாடுகள் அனைத்துக்கும் சாவர்க்கர் ஆதரவு இருந்ததை காவல்துறை தரப்பு நிரூபித்தது. ஆனால், சதித் திட்டத்தை சாவர்க்கார் தான் உருவாக்கித் தந்தார் என்பதை மட்டும் அரசு தரப்பால் நிரூபிக்க முடியாததால் அவர் வழக்கிலிருந்து விடுதலை ஆனார். வழக்கில் குற்றம் சாட்டப் பட்டவர்களோடு சாவர்க்கார் நடுநாயகமாக அமர்ந்து எடுத்துக் கொண்ட ஒரு படம் முக்கிய சாட்சியாக முன் வைக்கப்பட்டது. (இப்போது நாடாளுமன்ற வளாகத்திலேயே சாவர்க்கர் படம் மாட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது)
- தன்னுடைய தரப்பு வாதங்களை 90 பக்கங்களில் ஒரு அறிக்கையாக தயாரித்து, கோட்சே நீதிமன்றத்தில் ஆங்கிலத்தில் தான் படித்தான். காந்தியை கொலை செய்தது நான்தான் என்பதை கோட்சே ஒப்புக் கொண்டான். வழக்கையும் தாண்டி ஒரு இந்துத்துவப் பிரச்சார மேடையாக கோட்சே நீதிமன்றத்தைப் பயன்படுத்தினான். இந்து புராணங்களிலிருந்து மேற்கோள் காட்டியதோடு, பகவத் கீதையில் தர்மத்தைக் காக்க கொலை செய்வது பாவம் இல்லை என்ற ‘கிருஷ்ணன் உபதேச’த்தையும் தனது கொலைக்கு நியாயம் கற்பிக்க கோட்சே பயன்படுத்தினான். “அகண்ட பாரதம் வாழ்க; வந்தே மாதரம்” என்ற முழக்கங்களோடு தனது வாக்குமூலத்தை நிறைவு செய்தான். (கோட்சே கூறும் அகண்ட பாரதம் என்பது இந்திய எல்லைகளைக் கடந்து பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கான், பர்மா, இலங்கையையும் உள்ளடக்கியது)
- கோட்சேயின் இந்த பேச்சு பிறகு சிறு வெளி யீடாக வெளி வந்தது. இந்த உரையை தயாரித்துக் கொடுத்தது அவனின் குருவான சாவர்க்கார் தான் என்று சொல்லப்படுகிறது.
- செங்கோட்டை நீதிமன்றம் - கோட்சே, நாராயண் ஆப்தே இருவருக்கும் தூக்குத் தண்டனை விதித்தது. இருவரும் பார்ப்பனர்கள் சதியில் பங்கேற்ற கோபால் கோட்சே (கோட்சே சகோதரர்) தார்கரே, மதன்லால், ஷங்கர், பார்ச்சூர் ஆகிய 5 பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப் பட்டது.
- கொலை சதியில் இடம் பெற்று பிறகு அப்ரூவராக மாறி உண்மைகளைக் கூறிய திகம்பர் பாட்ஜே வுக்கு மன்னிப்பு வழங்கி நீதிமன்றம் விடுதலை செய்தது. நீதிபதி தீர்ப்பை வாசிக்கும்போது குற்றவாளிகள் “ஹிந்து தர்ம கி ஜெய்; ஹிந்தி, ஹிந்து, ஹிந்துஸ்தான்” என்று முழக்கமிட்ட படியே இருந்தார்கள்.
- தண்டனை பெற்ற நான்கு நாட்களில் குற்றவாளிகள் வழக்கை மேல் முறையீடு செய்தனர். வழக்கு விசாரணை சிம்லாவில் இருந்த பஞ்சாப் உயர்நீதிமன்றத்துக்கு வந்தது. 1949 மே 2 ஆம் தேதி மேல்முறையீட்டு விசாரணைகள் தொடங்கின. நீதிபதிகள் ஏ.என்.பண்டாரி, அச்ரூராம், ஜி.டி. கோரல்லா ஆகியோர் வழக்கை விசாரித்தனர்.
- மேல் முறையீட்டு வழக்கு விசாரணை நடந்து கொண்டிருந்தபோது குற்றவாளிகளுக்கு ஆதரவாக அனுதாபங்களை உருவாக்கும் முயற்சிகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டன.
- கோட்சேவாவது திருமணமாகாதவர்; ஆனால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட நாராயண் ஆப்தேவுக்கு ஒரு மனைவியும், ஒரு காதலியும் இருக்கிறார்களே, அவரை தூக்கில் போட்டால், குடும்பம் என்னாவது என்ற கருத்தை ஆர்.எஸ்.எஸ். பார்ப்பன வட்டாரங்கள் திட்டமிட்டு பரப்பின. சில ஏடுகளும் எழுதின.
- சிம்லா உயர்நீதிமன்ற விசாரணையிலும் கோட்சே தனது வாக்குமூலத்தை நீண்ட உரையாக கைதேர்ந்த பேச்சாளனாக முன் வைத்தான். நீதிமன்றத்தில் திரட்டப்பட்டிருந்த பெண்கள், கோட்சே வாக்குமூலத்தைக் கேட்டு கண்ணீர் விட்டு அழுதார்கள். இதன் பின்னணியைப் புரிந்து கொண்ட நீதிபதி ஜி.டி. கோஸ்லா “இந்தப் பெண்களை தீர்ப்பு எழுதச் சொல்லியிருந்தால் கோட்சேயை விடுதலை செய்திருப்பார்கள்” என்று கூறினார்.
- ஒன்றரை மாத விசாரணைக்குப் பிறகு 1949 ஜூன் 21 ஆம் தேதி தீர்ப்பு வழங்கிய உயர்நீதிமன்றம், கோட்சே, ஆப்தே தூக்குத் தண்டயை உறுதி செய்தது. கார்கரே, மதன்லால், கோபால் கோட்சே ஆகியோர் ஆயுள் தண்டனையும் உறுதி செய்யப்பட்டது. ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட, டாக்டர் பார்ச்சூர், ஷங்கர் கிஸ்தய்யா இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.
- இதற்குப் பிறகு ஆர்.எஸ்.எஸ். வட்டாரங்கள், காந்தி உயிருடன் இருந்திருப்பாரேயானால் இந்த தூக்குத் தண்டனை விதிப்பை ஏற்க மாட்டார் என்ற கருத்துகளைப் பரப்பி வந்தன. காந்தியின் மகன்கள்கூட தூக்குத் தண்டனை வேண்டாம் என்று அறிக்கை விடுத்தனர்.
- 1949 நவம்பர் 15ஆம் தேதி தூக்கிலிட நாள் குறிக்கப்பட்டது. அம்பாலா பொதுச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த இருவரையும் தூக்கிலிடப் படும் நாளன்று அதிகாலையில் இதே வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கோபால் கோட்சே, மதன்லால், கார்கரே மூவரும் நேரில் சந்திக்க வந்தனர். அனைவரும் ஒன்றாக சேர்ந்து ‘பகவத் கீதை’யைப் படித்தார்கள்.
- அந்த நேரத்திலும் தனது ஜோதிடப் பலன் மீது ஆப்தே அவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தான். தனது ஜோதிட பலன்படி தனக்கு நீண்ட ஆயுள் உறுதி செய்யப்பட்டிருப்பதால் தூக்குத் தண்டனை எப்படியும் நின்றுவிடும் என்று மதன்லால் கூறியதாக சிறைத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால், ஜோதிடம் மதன்லாலையும் காப்பாற்ற வில்லை. கடைசி நேரத்தில் தூக்கு மேடைக்கு வருவதற்கு ஆப்தே முரண்டு பிடித்தான். மிகவும் போராடி சிரமப்பட்டே அவரை தூக்கிலிட

(4 ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# கொளத்தூர் அய்யம்புதூரில் கழகம் நடத்திய பயிற்சி முகாம்







கழகத்தில் சேர விரும்பிய சித்ராவுக்கு கழகத் தலைவர் நூல் பரிசளிக்கிறார்

சேலம் மேற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் கொளத்தூர் ஒன்றியம் அய்யம்புதூர் கிராமத்தில் திராவிடர் விடுதலைக் கழக பெரியாரியல் பயிற்சிமுகாம், மே 23, 24 தேதிகளில் அன்னை கனகாம்பாள் திருமண மண்டபத்தில் சிறப்புடன் நடந்தது.

இதுவரை பெரியாரியல் பயிற்சி முகாமில் பங்கேற்காத புதிய இளைஞர்களுக்கான இந்த முகாமில் 20 பெண்கள் உள்பட 45 தோழர்கள் பங்கேற்றனர். காவலாண்டியூர் ஒன்றியக் கழகம் பயிற்சி முகாமை மாவட்டக் கழகம் சார்பில் முன்னின்று நடத்தியது.

மே 23 அன்று மாலை 9.30 மணியளவில் முகாமை கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி தொடங்கி வைத்தார்.

முதல் வகுப்பாக ‘பெரியார் ஒரு அறிமுகம்’ என்ற தலைப்பில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் வகுப்பு எடுத்தார். மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு 3 மணியளவில் கழகத் தலைமைக் குழு உறுப்பினர் மடத்துக்குளம் மோகன், ‘புராணம் - மூட நம்பிக்கைகள்’ என்ற தலைப்பில் பேசினார். பிற்பகல் 4 மணியளவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ‘திராவிடர் இயக்க வரலாறு’ என்ற தலைப்பில் வகுப்பு எடுத்தார்.

தொடர்ந்து மடத்துக்குளம் மோகன் , ‘மந்திரமா தந்திரமா’ நிகழ்ச்சிகளை நடத்தினார்.

இரண்டாம் நாள் மே 24 அன்று காலை முதல் வகுப்பை விடுதலை இராசேந்திரன், ‘மதவாதம் - ஆர்.எஸ்.எஸ்.’ என்ற தலைப்பிலும், அம்பேத்கர் குறித்து ஆசிரியர் சிவகாமியும் வகுப்பு எடுத்தனர். மதிய உணவுக்குப் பிறகு ‘திராவிடர் விடுதலைக் கழகம்’ என்ற தலைப்பில் பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரனும், ‘திராவிட இயக்கமும் ஈழமும்’ என்ற தலைப்பில் கொளத்தூர் மணியும் வகுப்பு எடுத்தனர்.

பயிற்சியாளர்களுக்கு ‘வினா-விடை’ புதிர் போட்டிகளைத் தோழர்கள் குமரேசன், பரத் நடத்தினர். பயிற்சியாளர்கள் எழுப்பிய அய்யங்களுக்கு தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் விளக்கமளித்தனர். பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

காவலாண்டியூர் ஈசுவரன், காவை இளவரசன், பரத், விஜய்குமார் முன்னின்று ஏற்பாடுகளை செய்தனர்.

தோழர்கள் சி. சுப்ரமணியம், பரத், விஜய்குமார், கழக முயற்சியில் ஜாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்ட சிறீதர்-தேவப்பிரியா இணையர், உணவுக்கான ஒவ்வொரு வேளை செலவுகளையும் ஏற்றனர்.

## மண்டபத்தில் பணியாற்றிய பெண் கழகத்தில் சேர விருப்பம்

இரண்டு நாள் பயிற்சிகளையும் நேரில் கவனித்து, அதில் ஈர்க்கப்பட்டு மண்டபத்தில் துப்புரவுப் பணியில் ஈடுபட்ட சித்ரா என்ற பெண் தோழர் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொள்ள முன் வந்தார். கழகத் தலைவர் அவருக்கு ‘பெரியார் வரலாற்று’ நூலை வழங்கினார்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

விரும்புகிறோம்.

தமிழ்நாட்டிலிருந்து நாடாளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பல உறுப்பினர்கள் பாரதிய ஜனதாகட்சிக்கு சிம்ம சொப்பனமாக நாடாளுமன்றத்தில் முழங்கக்கூடியவர்கள், அதையும் நாடு பார்க்கத்தான் போகிறது.

இந்தியாவிலேயே தமிழ்நாடு இப்போது தனித்து நிற்கிறது. இது பெரியார் மண் என்ற செய்தியை உரத்துப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. எதிர் காலத்தில் கடும் நெருக்கடிகளை தமிழ்நாடு சந்திக்கும் அதை முறியடிக்க பெரியாரின் கைத்தடியை உயர்த்திப் பிடித்தாக வேண்டும். இந்தக் கைத்தடி பெரியார் இயக்கங்களுக்கு மட்டுமே சொந்தமானது அல்ல. பார்ப்பனிய மதவாதத்தை முறியடித்து - தமிழ்நாட்டின் தனித்துவத்தைக் காக்கத் துடிக்கும் கட்சிகள், இயக்கங்கள், வெகுமக்கள் ஒவ்வொருவரும் உரிமையோடு உயர்த்திப் பிடிக்க வேண்டிய கைத்தடி.

தமிழ்நாடு பெரியார் மண் என்பதை உறுதிப்படுத்திடவும் அதற்கான களங்களை தமிழகம் சந்தித்திடவுமான அரசியல் சூழல் உருவாகி இருக்கிறது.மோடித்துவத்தின் சவாலை-தமிழகம் முறியடிக்கும் என்பதை நிரூபித்துக் காட்டுவோம். வெல்லப்போவது பெரியார் தத்துவம்தான்.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டியிருந்தது என்று சிலர் நூல்களில் எழுதியிருக்கிறார்கள். ஆனால், கோட்சேவிடம் கடைசி நேரத்தில் பயமும் தடுமாற்றமும் இருந்தது என்றும், ஆப்தே தான் உறுதியாக இருந்தார் என்றும் தண்டனை நிறைவேற்றத்தை நேரில் பார்த்த நீதிபதி ஜி.டி.கோஸ்லா எழுதி இருக்கிறார்.

- “நான் இறந்த பிறகு என்னுடைய சாம்பலை இந்தியாவிலுள்ள எந்த நதிகளிலும் கரைக்கக் கூடாது; இந்த நதிகளில் காந்தி சாம்பல் கரைக்கப்பட்டு அசுத்தமாகி விட்டது; காந்தி சாம்பல் கரைக்கப்படாத, பாகிஸ்தானில் உள்ள சிந்து நதியில் தான் கரைக்க வேண்டும்” என்று கோட்சே தன்னிடம் நேரில் கூறியதாக அவரது தம்பி கோபால் கோட்சே கூறினார். தூக்கிலிடப்பட்ட இருவரின் உடலும் அம்பாலா சிறைச்சாலையில் எரியூட்டப்பட்டன.
- காந்தியார் கொலையில் அரசு, அரசியல்வாதிகள் பங்களிப்பு மற்றும் விசாரணையில் நீண்ட தாமதம் குறித்த அய்யங்கள் எழும்பியதால் மத்திய அரசு 1965இல் கோபால் ஸ்வரூப் பதக் தலைமையில் ஒரு விசாரணை ஆணையத்தை நியமித்தது.1966இல் பதக் மத்திய அமைச்சரானார்; ஆணையம் செயலிழந்தது.

அரசுக்கு எதிராக மீண்டும் போராட்டங்கள் நடந்ததால் 1966இல் நீதிபதி ஜே.எல். கபூர் தலைமையில் மற்றொரு ஆணையம் அமைக்கப்பட்டது. டெல்லி மற்றும் பூனா காவல்துறை விசாரணையில் அலட்சியம் காட்டியுள்ளதாக ஆணையம் இடித்துரைத்து விசாரணையை முடித்துக் கொண்டது.

(தொடரும்)

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

யிருக்கிறார்களா? இதுபோன்ற பொறுப்பற்ற கேள்விகளுக்கும் வதந்திகளுக்கும் நான் எப்படி பதில் சொல்ல முடியும்? நான் அந்த மடத்தின் பக்தர். அந்த அடிப்படையில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மடத்துக்குச் செல்வேன். அந்த மடத்தின் எந்தப் பொறுப்பிலும் நான் இல்லை. அந்த மடத்துக்குச் சொந்தமாக திருவனந்தபுரத்தில் மருத்துவக் கல்லூரி இருப்பதுகூட எனக்குத் தெரியாது. அப்புறம் எப்படி நான் அதை விற்க காய் நகர்த்த முடியும்? உறுதியாகச் சொல்கிறேன், மடத்தில் எந்தத் தலையீடும் நான் செய்யவில்லை. அது எனக்குத் தேவையும் இல்லை” என்றார் தெளிவாக.

சங்கரராமன் கொலை வழக்குச் சுழலில் சிக்கி ஏற்கெனவே மடத்தின் பெயர் சிதைந்து கிடக்கிறது. இந் நிலையில், சொத்துகளைக் குறிவைத்து மறுபடியும் மடத்தின் பெயர் டேமேஜ் ஆக ஆரம்பித்துள்ளது. ஆன்மிக மையங்கள், அதிகார மையங்களாகவும் செயல்பட ஆரம்பித்தால், ஆபத்து தான் என்பதற்கு காஞ்சி மடமே மீண்டும் சாட்சியாகிக் கொண்டிருக்கிறது!

**‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வங்கிக் கணக்கு**
**‘PURATCHI PERIYAR MUZHAKAM’**

கரூர் வைஸ்யா வங்கி, அடையாறு கிளை,
‘கரண்ட்’ அக்கவுண்ட்
(Karur Vysya Bank, Adyar Branch,
Current Account)

எண் : 1257115000002041
IFSC : KVBL0001257

தொடர்புக்கு:
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆9841489896

மேற்கண்ட கணக்கில் கட்டமைப்பு நிதியை செலுத்தலாம்

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 30th May 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN